# மான்மின் செய்திகள்

# Manmin News

Manmin Ministries India 15D/41, Ponnankinaru St, Villivakkam, Chennai - 49, India. Ph: 044-26172471 Email: manminnewsasia@gmail.com


# “ஆண்டவர் மீதுள்ள அன்பு நம்மை அவருக்கு உண்மையுள்ளவர்களாக்குகிறது!”

## 2015 போதகர்கள் மற்றும் பணியாளர்கள் அர்ப்பண ஆராதனை, “அர்ப்பணிப்பின் அர்த்தம்”

1



2



3




தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ (படம் 1) வெளிப்பாடு நிறைந்த உவமானங்கள் மூலமாக அர்ப்பணிப்பின் உண்மையான அர்த்தத்தைப் போதித்தார். மேலும் அர்ப்பணிப்பாளர்கள் எல்லாவற்றிற்கும் மேலாக தேவனை நேசிப்பதற்கும் அவருடைய ராஜ்ஜியத்திற்காக உண்மையாய் வேலை செய்வதற்கும் தங்கள் மனதை நிர்ணயித்துக் கொண்டனர் (படம் 2 மற்றும் 3: அர்ப்பணிப்பாளர்களின் சிறப்பு கலை நிகழ்ச்சி).

பாராக்கின் கதவின் வெளிப்புறத்தில் மேற்கு வானில் சுடர்விடும் சூரியன் மறைய,

பலவீனமடைந்த தோள்களில் அவர் சிலுவையை சுமந்தார்; அவர் தலையில் ஒரு முட்கிரீடம்;

அவர் சரீரத்திலே சிவந்த இரத்தக்கறை படிந்த வஸ்திரத்தோடு பெலனற்றவராக இருந்தார்.

மரணத்திற்காக காத்திருக்க, பட்டண வாயிலின் வெளிப்பாதையில் நடந்து கொண்டு அவரையே நான் நினைக்கிறேன்.

சிலுவையின் மலைமேல் செல்வது எவ்வளவு கடினமானாலும்,

ஆண்டவர் எடுத்துக் கொண்ட பாதை இது, எப்படி அப்பாதையை நானும் எடுத்துக் கொள்ளாமல் இருப்பேன்...

ஆண்டவருடைய சீஷன் பேதுரு தலைகீழாக சிலுவையில் அறையப்பட்டார்.

இந்த வேதனையை எடுத்துக் கொள்ளாமல் நான் இருப்பதற்கு எந்த ஒரு காரணமும் இல்லை. இந்த மரணத்தின் பாதையையும் எடுத்துக்கொள்ளாமல் இருப்பதற்கு காரணம் ஏதும் இல்லை.

போதகர் கிசல் ஜூ அவர்கள் கொரியாவில் ஜப்பானிய காலனி ஆட்சியின்போது ஜப்பானிய போர் குற்றவாளிகளைக் கவுரவிக்கும் விக்கிரக வழிபாடு ஸ்தலங்களுக்குச் சென்று பார்க்க மறுத்ததால் இரத்தச் சாட்சியாக கொல்லப்பட்டார். போதகர் ஜூ அவர்கள் இயற்றிய “பாராக்கின் வெளிப்புற பாதை” என்ற பாடலை பாடுகையில், தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்கள் சூடான கண்ணீர் சிந்தினார். அவர், “ஆண்டவருடைய சீஷர்கள், அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகள் உட்பட விசுவாசத்தின் முற்பிதாக்கள் பலர் இப்பேற்பட்ட பாதையை எடுத்துக் கொண்டனர். போதகர் கிசல் ஜூ போன்ற இரத்தச் சாட்சியானோர் பலரும் இப்பாதையில் நடந்தனர். இது தான் விசுவாசம். அவர்கள் தேவனுடைய மற்றும் ஆண்டவருடைய அன்பை அறிந்திருந்த படியால் அவர்கள் பரலோகத்தை விசுவாசித்ததால், பூமியிலே உள்ள வேதனையெல்லாம் அவர்களுக்கு வேதனையாய் இருக்கவில்லை. ஏன்? சிறிது நேரத்தில் அவர்கள் வேதனை போய் விடும். அவர்களுக்காக பரலோகம் காத்திருந்தது” என்று கூறினார்.

மார்ச் 29, 2015 அன்று, ஞாயிறு மாலை ஆராதனையில் போதகர்கள், லேவி ஊழியர்கள் மற்றும் திருச்சபை பணியாளர்களுடைய அர்ப்பண ஆராதனையாய் இருந்தது. போதகர்கள், லேவி ஊழியர்கள் (திருச்சபையின் முழு நேர பணியாளர்கள்), மூப்பர்கள், மூத்த கண்காணியைகள், கண்காணிகள், கண்காணியைகள் மற்றும் இளம் கண்காணிகள், இளம் கண்காணியைகள், எஸ்தர் சங்கம் (போதகர்கள் மனைவிமார் குழு), மற்றும் ஜெப அர்ப்பணிப்பாளர்கள் சங்கம் ஆராதனைக்கு தங்களை அர்ப்பணித்தனர்.

தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்கள் “அர்ப்பணிப்பின் அர்த்தம்” (வெளி 2:10) என்ற செய்தியின்மூலம் அர்ப்பணிப்பாளர்களின் கவனத்தை வலுமையாக ஈர்த்து அவர்களது இருதயங்களை அசைத்தார். அவர், “நாம் தேவனுக்கான ஆண்டவருக்கான அன்போடு நம்மை அர்ப்பணிக்க வேண்டும். ஒரு கடமை உணர்ச்சியால் பலவந்தப் படுத்துவதால் அல்ல. இதற்காக முதலாவது, உங்கள் சுய ஆதாயத்திற்கேற்ப அடிக்கடி மாறுகிற மனநிலை உள்ளதா என்றும், இரண்டாவதாக நான் அர்ப்பணித்துள்ளேன் என்று சொன்னாலும் உங்கள் நிபந்தனையின்படியும் உங்களது சூழ்நிலையின்படியும் வேலை செய்கிறீர்களா என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும்.”

இந்த அர்ப்பணிப்பின் ஆராதனை மிகவும் அர்த்தமுள்ளதாய் இருந்தது, காரணம் இது மார்ச் 31, 2013 அன்று லேவி ஊழியர்களுக்கு கொடுக்கப்பட்ட சிறப்பு கிருபையை அவர்கள் உணரும்படி செய்தது. அப்போது மேய்ப்பருடைய தியாகத்தினாலும் அன்பினாலும் அவர்களுக்கு புதிய வாய்ப்பளிக்கப்பட்டது.

திருச்சபை அங்கத்தினர்களும்கூட, தங்கள் விசுவாசத்தை புரிந்துக்கொண்டு விசுவாசத்தில் மிகப்பெரும் வளர்ச்சியை அடைந்தனர். அர்ப்பணிப்பாளர்களும் தங்களுக்கு அளிக்கப்பட்ட மகா கிருபையையும் அன்பையும் திரும்பி பார்த்து தங்களது புதுப்பித்தலுக்காக நன்றி தெரிவித்தனர். அவர்கள் தங்கள் இருதயங்களில் வேத வசனத்தை மீண்டுமாக பதிவு செய்தனர், அது “மரணபரியந்தம் உண்மையுள்ளவனாயிரு, அப்பொழுது ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன்” என்பதாகும்.


# 2015 ஈஸ்டர் ஆராதனையும் பரிசுத்த திருவிருந்தும்


இயேசு மனுக்குலத்தை நேசித்து அவர்கள் சார்பாக சிலுவையில் அறையப்பட்டார். ஆனால், அவர் குற்றமற்றவராயும் பழுதற்றவராயும் இருந்ததால், அவர் மரணத்தை மேற்கொண்டு உயிர்த்தெழுந்தார். மேலும், இப்போது அவர் இன்னமும் உயிரோடிருக்கிறார். அவரை விசுவாசிப்பவர்களுக்கு உயிர்த்தெழுதலையும் நித்திய ஜீவனையும் வாக்களித்துள்ளார். கிறிஸ்தவத்தில் உயிர்த்தெழுதலின் அர்த்தம் என்பது இரட்சிக்கப்பட்டு மரிப்பவர்கள் உயிர்த்தெழுந்து உயிர்த்தெழுந்த சரீரத்தை தரித்து நித்திய காலமாய் வாழ்வார்கள் என்பதாகும்.

இந்த உயிர்த்தெழுதலின் நம்பிக்கை மற்றும் விசுவாசத்துடன் மக்கள் எவ்வகையான கஷ்டங்களையும் மேற்கொண்டு ஜெயிக்க முடியும். ஏப்ரல் 5, 2015 அன்று, மான்மின் மத்திய திருச்சபை ஈஸ்டர் ஆராதனையையும், பரிசுத்த திருவிருந்தையும் ஏறெடுத்தது. அது GCN TV வழியாக உலகமுழுவதும் ஒளிபரப்பப்பட்டது. ஞாயிறு காலை ஆராதனையில், தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்கள் “உயிர்த்தெழுதலின் அர்த்தம்” என்ற செய்தியையும் (யோவான் 14:6), ஞாயிறு மாலை ஆராதனையில் “விசுவாசிகளின் ஆசீர்வாதம்” (யோவான் 6:53–55) என்ற செய்தியையும் அளித்தார். பின்னர் அவர் பரிசுத்த திருவிருந்தை நடத்தினார். அதில் அங்கத்தினர்கள் ஆண்டவருடைய கிருபையையும் அன்பையும் தங்கள் இருதயங்களில் செதுக்கி வைத்தனர்.

பெண்கள் பணித்தள அங்கத்தினர்கள் முழு இதயத்தோடு தாங்கள் அலங்கரித்த முட்டைகளை ஈஸ்டர் கொண்டாட்டத்திற்கு அங்கத்தினர்களுக்கு கொடுத்தனர். ஏப்ரல் 2 முதல் 4 வரை, திருச்சபைக்கு அருகாமையிலிருந்த கம்பெனிகள், பொது அலுவலகங்களில் பணிபுரியும் வேலையாட்களுக்கு ஆண்டவரின் அன்பையும், உயிர்த்தெழுதலின் உணர்வையும் கொடுக்கும்படி அலங்கரிக்கப்பட்டிருந்த முட்டைகளை கொடுத்தனர்.

தங்களை மெய்யான பிள்ளைகளாய் உருவாக்கும் நிலையை விட்டுவிடாமல் இருக்கிற தேவனுடைய அன்பையும் இரக்கத்தையும், அங்கத்தினர்கள் தியானிப்பதற்கு நல்ல ஒரு வாய்ப்பாக ஈஸ்டர் ஞாயிறு இருந்தது. நம்முடைய பாவங்களிலிருந்து நம்மை மீட்கும்படிக்கு தேவனுக்கு கீழ்ப்படிந்த ஆண்டவருடைய அன்பையும், சத்தியத்திற்கு நம்மை நடத்துகிற பரிசுத்த ஆவியானவரின் உதவியையும் நாம் நினைவுகூற வேண்டும். அப்பொழுது நாம் தேவனுடைய சித்தத்தை அடையலாம் – “எப்போதும் சந்தோஷமாயிருங்கள், இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள், எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரம் செய்யுங்கள்” (1 தெசலோனிக்கேயர் 5:16–18) என்பது எதிர்பார்க்கப்படுகிறது.



ஆண்டவரின் உயிர்த்தெழுதல் விசுவாசிகளுக்கு பரலோகத்திற்கான நம்பிக்கையை அதிகமாக கூட்டி வழங்குகிறது. ஈஸ்டர் என்பது ஆண்டவரின் உயிர்த்தெழுதலின் நற்செய்தியை விசுவாசிகள் பகிர்ந்தளிக்கும் நாளாய் இருக்கிறது. (படங்கள்: 2014 ஈஸ்டர் ஆராதனையும், பரிசுத்த திருவிருந்தும், மகிழ்ச்சியோடு முட்டைகளை பகிர்ந்தளிக்கும் திருச்சபை அங்கத்தினர்கள்).



தலைமை போதகர். அறிவர். ஜேராக் லீ

# உயிர்த்தெழுதலின் ஆண்டவர்

"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக; அவர் இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி, தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்" (1பேதுரு 1:3-4).

ஈஸ்டர் என்பது மனுக்குலம் அனைத்தையும் இரட்சிக்கும்படிக்கு மாம்சத்தில் இவ்வுலகத்திற்கு வந்த இயேசு சிலுவையிலே மரித்து உயிர்த்தெழுந்ததை நினைவுகூருகிற நாளாகும். உயிர்த்தெழுந்த ஆண்டவர் மூலமாக நமக்கு அருளப்பட்ட ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை நாம் அலசிப் பார்ப்போம்.

### 1. ஆண்டவர் மரணத்தை மேற்கொண்டு உயிர்த்தெழுந்தார்

அவரது பொது ஊழியத்தின் போது, இயேசு ராஜ்ஜியத்தின் சுவிசேஷத்தைப் பரப்பி பல மக்களின் வியாதிகள் மற்றும் பெலவீனங்களிலிருந்து அவர்களை சுகமாக்கி தேவனுடைய வார்த்தையை உறுதிப்படுத்தினார். கூடவே, அவர் தேவனுடைய குமாரன் என்று ஜனங்கள் விசுவாசிக்கத்தக்கதாக அநேக அற்புத அடையாளங்களை நிகழ்த்தினார். ஆவியில் எளிமையும் நற்குணமும் கொண்டிருந்த அநேக மக்கள் இயேசுவை ஏற்றுக் கொண்டனர். ஆனால் பொல்லாதவர்களாயும் அகந்தையுள்ளவர்களாயும் இருந்த மக்கள் பொறமை கொண்டு இயேசுவைப் புறக்கணித்தனர்.

அவர் பாவமற்றவராய் இருந்தாலும் எதிராளியாகிய பிசாசினாலும் சாத்தானாலும் தூண்டப்பட்ட மக்கள் இயேசுவை கொலை செய்ய வகைத் தேடி, இறுதியாக அவரை சிலுவையிலறைந்தனர். அவர்கள் முற்றிலும் ஜெயம் பெற்றுவிட்டனர் என்று நினைத்தனர். ஆனால் அவை அனைத்துமே காலங்களுக்கு முன்னே நிர்ணயிக்கப்பட்டு மறைக்கப்பட்ட இரகசியமாய் இருந்தது. இது தேவனுடைய அநாதி தீர்மானமாகும் (1கொரிந்தியர் 2:7–8).

பாவத்தின் சம்பளம் மரணம் என்று ஆவிக்குரிய பிரமாணம் ஒன்று சொல்கிறது. அதாவது நாம் பாவம் செய்தால், அதற்கு தண்டனை மரணம் (ரோமர் 6:23). ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத்தில் வாழ்ந்துக் கொண்டிருந்தபோது அவர்கள் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாத பாவத்தை செய்தனர். அதன் விளைவாக இப்பிரமாணத்தின்படி அவர்கள் தங்கள் நித்திய ஜீவனை இழந்து தோட்டத்திலிருந்து வெளியே துரத்தப்பட்டனர். மேலும், ஒருபோதும் பாவமே செய்யாத இயேசுவை சிலுவையிலறைந்து கொலை செய்தது இந்த ஆவிக்குரிய பிரமாணத்தின் மீறுதலாகும்.

ஆகவே தான் அப்போஸ்தலர் 2:24ல், "தேவன் அவருடைய மரண உபாதிகளின் கட்டை அவிழ்த்து, அவரை எழுப்பினார்; அவர் மரணத்தினால் கட்டப்பட்டிருக்கக் கூடாதிருந்தது." இங்கு சொல்லப்பட்டபடி, இயேசு மரணத்தை மேற்கொண்டு மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார்.

### 2. ஆண்டவர் மூலமாக நமக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் அருளப்பட்டன

#### 1) இரட்சிப்பின் பாதை திறக்கப்பட்டது

இயேசு சிலுவையில் தொங்கி உயிர்த்தெழுந்ததால் நம்முடைய இரட்சகரானார்.

ரோமர் 5:18–19 சொல்கிறது, "ஆகையால் ஒரே மீறுதலினாலே எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானதுபோல, ஒரே நீதியினாலே எல்லா மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உண்டாயிற்று. அன்றியும் ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டதுபோல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள்." இதன் அர்த்தம் பாவமற்ற இயேசுவின் ஒரே நீதியான செயல் மூலமாக அதாவது அவரது சரீரத்தையும் ஜீவனையும் பாவிகளுக்காக பலியாக்கியதால் அநேக மக்கள் நீதிமான்களாக்கப்படுவார்கள்.

வேறு வார்த்தையில், இயேசு நமக்காக கிருபாதார பலியாகியதால், இயேசுவே ஆண்டவர் என்று அறிக்கை செய்து தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார் என்று விசுவாசிக்கிற யாராயிருந்தாலும் இரட்சிப்பைப் பெற முடியும் (ரோமர் 10:10). உயிர்த்தெழுந்த ஆண்டவர் மூலமாக, மனுக்குலம் அனைத்திற்கான இரட்சிப்பின் பாதை திறக்கப்பட்டது.

1யோவான் 2:3–4 வசனம் கூறுகிறது, "அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொள்ளுகிறவர்களானால், அவரை அறிந்திருக்கிறோமென்பதை அதினால் அறிவோம். அவரை அறிந்திருக்கிறேனென்று சொல்லியும், அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான். அவனுக்குள் சத்தியமில்லை." ஆக, நாம் தேவனுடைய வார்த்தையைக் கைக்கொள்ளும்போது மட்டுமே பரிபூரண இரட்சிப்பை அடைய முடியும் என்பதை நாம் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். நீங்கள் தேவனுடைய வார்த்தையில் வாழ்ந்து ஆண்டவரோடு ஐக்கியப்பட்டு இயேசுவை ஆண்டவராக ஏற்றுக்கொண்டு விசுவாசத்தை அறிக்கைச் செய்வதால் நீதிமான்களாக்கப்பட வேண்டும் என்று உங்களை ஊக்கப்படுத்துகிறேன்.

#### 2) மாம்சீக உலகிலிருந்து வித்தியாசமான ஆவிக்குரிய உலகம் வெளிப்படுத்தப்பட்டது

ஆவிக்குரிய உலகம் நிஜமாய் இருக்கிறது என்பதை மாம்சீக வரம்புகள் உள்ள ஜனங்கள் புரிந்துக்கொள்ள முடியாவிட்டாலும் உயிர்த்தெழுந்த ஆண்டவர் அவர்களுக்கு காண்பித்தார். நாம் பார்க்கிற பூமி மட்டும் அல்ல, மனிதனுடைய எண்ணங்களுக்கும் சிந்தனைகளுக்கும் அப்பால் வரம்பற்ற ஆவிக்குரிய உலகம் இருக்கிறதற்கு வலுமையான ஆதாரங்கள் உள்ளன.

ஆகவே, உயிர்த்தெழுந்த ஆண்டவரில் விசுவாசமுள்ளவர்கள் காணக்கூடிய நிஜத்தில் கட்டப்பட்டவர்கள் அல்ல, ஆனால் அவர்கள் விசுவாசத்துடன் மனிதர்களுடைய வரம்புகளை கடக்க முடியும் (மாற்கு 9:23). இதனால்தான் விசுவாசத்தோடு அவரை சார்ந்துக்கொள்கிற மக்களோடு ஆண்டவர் இருந்து அவர்களுக்கு பெலன் தருகிறார். மாற்கு 16:20 சொல்கிறது, "அவர்கள் புறப்பட்டுப்போய், எங்கும் பிரசங்கம் பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனேகூடக் கிரியை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார்."

இயேசுகிறிஸ்து நேற்றும், இன்றும் என்றும் மாறாதவராய் இருக்கிறார். ஆக, இன்றைக்கும்கூட, நீங்கள் அவரை சார்ந்து முழு இருதயத்தோடும் அவரை விசுவாசித்தால் அவர் உங்களிடத்தில் வந்து உங்களோடு இருப்பார். மேலும் அநேக மக்கள் விசுவாசத்தைப் பெற்று தேவனை மகிமைப்படும்படியாக தகுதியான மக்கள் அற்புத அடையாளங்களை வெளிப்படுத்தும்படி அனுமதிக்கிறார். மேலும், கண்காணியாகிய ஸ்தேவான் அவன் ஆவிக்குரிய கண்களுடன் ஆண்டவரை கண்டான். நம்முடைய ஆவிக்குரிய கண்கள் தேவனுடைய கிருபையின்கீழ் திறக்கப்பட்டால், நாம் ஆண்ட வரைக்கூட பார்க்க முடியும்.

ஆண்டவருடைய உயிர்த்தெழுதலின் மூலமாக ஆவிக்குரிய உலகமானது நிச்சயமாக இருக்கிறது என்பதை நீங்கள் புரிந்துக்கொண்டு, நம்மோடு ஆண்டவர் இருக்கிறார் என்று விசுவாசித்து, உங்கள் இருதயத்தோடுக்கூட அவரை நீங்கள் சார்ந்துக்கொள்வீர்கள் என்று நம்புகிறேன்.

#### 3) பரலோகம் மற்றும் உயிர்த்தெழுதலின் நம்பிக்கை அளிக்கப்பட்டது

1பேதுரு 1:3–4 கூறுகிறது, "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக; அவர், இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி, தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்."

உயிர்த்தெழுந்த ஆண்டவர் மூலமாக, தேவன் நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தது மாத்திரமல்ல, பரலோகத்திற்கான நம்பிக்கையை நமக்குத் தந்திருக்கிறார். மறைந்துப்போகாத அழியாத நித்திய பொக்கிஷங்களை சுதந்தரித்துக் கொள்வார்கள் என்ற ஜீவனுள்ள நம்பிக்கை தேவனுடைய பிள்ளைகளுக்கு இருக்கிறது. அதனால் அவர்கள் உலகத்தை விசுவாசத்தோடு மேற்கொள்ள முடியும். இது உயிர்த்தெழுதலின் நம்பிக்கையோடுகூட நாம் வாழும்படி செய்கிற தேவனுடைய அன்பலிருந்து வெளிப்படுவதாகும்.

உயிர்த்தெழுந்த ஆண்டவர் அநேக மக்களுக்கு முன் தோன்றினார். அதன் மூலம் அவருடைய சீஷர்களும் அவரை விசுவாசிப்பவர்களும் உயிர்த்தெழுதலின் நம்பிக்கையை உறுதியாக பற்றிக் கொள்ளும்படி தோன்றினார். முன்பு அவர் பேதுரு முன்பும், பன்னிரெண்டு சீஷர்கள் மற்றும் ஏறத்தாழ 500 சகோதரர்கள் கூடியிருக்கும்போது அவர்கள் முன்பும் தோன்றினார் (1கொரிந்தியர் 15:5–6). அவர் திபேரியா கடற்கரையிலே மீன் பிடித்துக் கொண்டிருந்த சீஷர்களுக்கும் தம்மைத்தாமே வெளிப்படுத்தினார். உயிர்த்தெழுதலின் சரீரத்தை அவர்களுக்கு காண்பிப்பதன் மூலமாக அவர்களுக்கு உயிர்த்தெழுதலின் வலுமையான நம்பிக்கையை கொடுக்க விரும்பினார்.

உணவு உண்ணும்போது, உயிர்த்தெழுந்த சரீரம் ஜீரணிக்கவோ அல்லது கழிக்கவோ செய்யாது. ஆனால் அது உடனடியாக கரைந்து சுவாசத்தின் மூலம் வெளியேறி விடும். பரலோகத்தில் மக்கள் சாப்பிடாமலே வாழ முடியும் என்பது உண்மைதான். ஆனால் அவர்கள் ஜீவத்தண்ணீரை பருகும்போது அல்லது பழத்தைப் புசிக்கும்போது அல்லது முகரும்போது, அவர்கள் பெரும் சந்தோஷத்தையும் மகிழ்ச்சியையும் அனுபவிப்பர். தேவன் நித்திய உலகத்தை உண்டாக்கினார். உயிர்த்தெழுந்த ஆண்டவரில் நம்பிக்கையாக இருக்கிற அவருடைய பிள்ளைகளுக்கு தேவன் அவர்கள் இந்தப் பூமியிலே செய்வதற்கேற்றபடியான பலனளிப்பார்.

ஆனால் இயேசு கிறிஸ்துவுக்காக, நாம் புகையைப் போல சற்றுநேரம் தோன்றி பின் மறைந்துப் போகிற மதிப்பற்ற ஜீவராசிகளாய் இருப்போம் (யாக்கோபு 4:14). உயிர்த்தெழுந்த ஆண்டவர் மூலமாக ஜீவனுள்ள நம்பிக்கையுடையவர்கள் எதைச் செய்தாலும், தேவனுடைய மகிமைக்காகவே செய்து பரலோகத்தில் பொக்கிஷங்களை சேர்த்து வைப்பர். ஆகவே அவர்கள் பரலோகத்தில் தேவனுடைய விலையேறப்பெற்ற பிள்ளைகளாக நடத்தப்படுவார்கள்.

2 கொரிந்தியார் 4:18 சொல்கிறது, "ஏனெனில், காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்." தேவன் நம்மை அதி சீக்கிரத்தில் அழிந்து போகப் போகிற இந்த உலகத்தின் மீது நம்பிக்கையை வைக்கச் செய்யாமல், மாறாக உயிர்த்தெழுந்த ஆண்டவருக்கு நன்றி செலுத்தும்வண்ணமாக நாம் ஜீவனுள்ள நம்பிக்கையையும், நித்திய வாசஸ்தலத்தில் வாழப்போகும் நம்பிக்கையையும் உடையவர்களாக இருக்கும்படி நம்மை நடத்தியுள்ளார். இது தான் பிதாவாகிய தேவனுடைய அன்பாக இருக்கிறது.

கிறிஸ்துவில் பிரியமான சகோதர சகோதரிகளே, நாம் விதையை விதைக்கும்போது, அது கெட்டுப் போய் மறைந்து போவதைப் போல காணப்படும். ஆனால் உள்ளே ஒரு மொட்டு முளைத்து, அது வளர்ந்து, பூத்துக்குலுங்கி அதிகமான கனிகளைத் தரும்.

மாம்சத்தில் இந்த உலகத்தில் வந்த தேவனுடைய குமாரனாகிய இயேசுவும், விதையைப்போல மரித்தார். ஆனால் அவர் உயிர்த்தெழுந்தார். அவருடைய சிலுவை பாடுகள் மற்றும் உயிர்த்தெழுதலின் மூலமாக அவரில் விசுவாசத்தோடு இருக்கிற யாரானாலும் இரட்சிப்பை அடையலாம். நீங்கள் உங்கள் இருதயத்தை இரட்சிப்பு, நித்திய ஜீவன், உயிர்த்தெழுதல் ஆகியவற்றின் நம்பிக்கையோடும் பரலோகத்திற்கான நம்பிக்கையோடும் மீண்டுமாய் நிரப்ப வேண்டும் என்று நான் ஆண்டவருடைய நாமத்தினால் உங்களுக்காய் ஜெபிக்கிறேன்.


**விசுவாசத்தின் அறிக்கை**

**1. மான்மின் மத்திய திருச்சபை வேதாகமம் தேவனால் உச்சரிக்கப்பட்ட பரிபூரணமும் பிழையற்றதுமான வார்த்தை என நம்புகிறது.**
**2. மான்மின் மத்திய திருச்சபை திரித்துவ தேவனின் ஐக்கியத்தையும் கிரியைகளையும் நம்புகிறது; பரிசுத்த பிதாவாகிய தேவன், பரிசுத்த குமாரனாகிய தேவன் மற்றும் பரிசுத்த ஆவியாகிய தேவன்**
**3. மான்மின் மத்திய திருச்சபை, இயேசு கிறிஸ்துவின் மீட்கும் இரத்தத்தினால் மாத்திரமே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது என நம்புகிறது.**
**4. மான்மின் மத்திய திருச்சபை இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும், பரமேறுதலையும் அவரின் இரண்டாம் வருகையையும், 1000 வருட அரசாட்சியையும், நித்திய பரலோகத்தையும் நம்புகிறது.**
**5. மான்மின் மத்திய திருச்சபை அங்கத்தினர்கள் ஒவ்வொரு முறையும் அவர்கள் கூடிவரும்போதெல்லாம் தங்களது விசுவாச அறிக்கையை "அப்போஸ்தலருடைய விசுவாச பிரமாணத்தின்" மூலமாக அறிக்கை செய்து, அதின் சொற்படியான உள்ளடக்கத்தை நம்புக்கின்றனர்.**

"எல்லோருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் [தேவன்]..." [அப். 17:25]
"அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" [அப். 4:12]




அவரது மனைவி, கண்காணியை சோரோங் ஹீயோ, இரண்டாவது மகன் ஹான்க்யுல் மற்றும் அவரது மூத்த மகன் கிப்பும்

## "நான் முதுகு தண்டுவட நகர்விலிருந்து சுகமானேன்"

**கண்காணி டோங்பில்லீ,** வயது 40,
க்வாங்ஜூ மான்மின் திருச்சபை, தென்கொரியா

2015 மார்ச் 3 அன்று, ஒரே நேரத்தில் இரண்டு பெட்டிகளை தூக்கினேன். அச்சமயத்தில் எனது குறுக்கில் ஏதோ நழுவியதுபோல உணர்ந்தேன்; அது விநோதமாயிருந்தது. நான் பெட்டிகளை நகர்த்தி வேறொரு இடத்தில் கீழே வைத்தேன். பின்பு நான் எழுந்து நின்றபோது என்னுடைய முதுகிலும் கால்களிலும் பயங்கரமான வலியை உணர்ந்தேன். நான் அறிவர். ஜேராக் லீ அவர்களது வியாதியஸ்தர்களுக்கான ஜெபத்தை GCNன் இணையதளத்தில் பெற்றுக் கொண்டேன் (www.gcntv.org). பின்னர் நான் எனது வீட்டிற்கு அருகாமையிலுள்ள நரம்பியல் மருத்துவமனைக்குச் சென்றேன்.

மருத்துவர் என்னிடம் எனக்கு அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டியிருக்கும். ஆனால் MRI முடிவுகள் தான் விளக்கங்களைக் கொடுக்கும் என்று கூறினார். கடுமையான வலியுடன் நான் முதுகு தண்டுவட மருத்துவமனைக்கு அவசர உதவி வாகனத்தில் விரைந்தேன்.

எனது MRI முதுகு தண்டுவட எலும்பில் 4 மற்றும் 5திற்கு இடையே நரம்புகளை அழுத்திக் கொண்டிருந்த முதுகு தண்டுவட தட்டு நகர்வைக் காண்பித்தது. மோசமாக, அத்தட்டை மூடியிருந்த சவ்வும்கூட கிழிந்துவிட்டது. அதனால் தட்டு கீழே விழுந்தது. அவர்கள் அதை அறுவைச் சிகிச்சை இல்லாமல் குணமாக்க வேறு வழி ஏதும் இல்லை என்று கூறினார்கள்.

பத்து வருடங்களுக்கு முன்பு, நான் மூவான் மதுர தண்ணீர் மூலமாகவும் அறிவர். லீ அவர்களது ஜெபத்தின் மூலமாகவும் பல்வகை குடல் புண்ணிலிருந்து சுகம் பெற்றிருந்தேன். ஒன்பது வருடங்களுக்கு முன்பு என்னுடைய முதல் குழந்தை உருவழிந்து பிறக்கும் அபாயத்தில் இருந்தது. ஆனால் அறிவர். லீ அவர்களது ஜெபத்தின் மூலமாக குழந்தையானது ஆரோக்கியமாக பிறந்தது.

இருப்பினும், நான் வெதுவெதுப்பான விசுவாசத்தில் இருந்தேன். தேவனுடைய பாதுகாப்பின்கீழ் இருக்க முடியாமல் போனேன். 2015 மார்ச் 7 அன்று, எங்கள் சபை, போதகர் ஹீசன் லீ அவர்களுடன் கைக்குட்டை சுகமளிக்கும் கூட்டத்தை நடத்தியது. விசுவாசத்துடன் சுகத்தைப் பெற்றுக்கொள்ளும்படிக்கு அதற்காக நான் ஆயத்தமானேன். அறுவைச் சிகிச்சைக்கான விலையை நான் தேவனுக்கு கொடுத்து உயர்திரு. லீ அவர்களின் கைக்குட்டை ஜெபத்தை பெற்றுக்கொண்டேன். பின்பு ஆச்சர்யப்படும்விதமாக எல்லா வலியும் போய்விட்டது. எனது சரீரத்தை எவ்வளவு கடினமாய் நான் அசைத்தபோதும், எந்த ஒரு வலியையும் நான் உணரவில்லை. என்னை குணமாக்கிய தேவனுக்கு எல்லா நன்றியையும் மகிமையையும் செலுத்துகிறேன்.




L4 மற்றும் L5த்திற்கு இடையே உள்ள தட்டு ஒன்று நகர்ந்து நரம்புகளில் அழுத்தம் வைக்கிறது.



இப்போது அவரால் குனிந்து அவரது சரீரத்தை நோக்க முடிகிறது.

## "எனக்கு தேவனுடைய சித்தத்தைப் போதிக்கும் பரிசுத்த சுவிசேஷத்தை கற்றுக்கொள்வதில் நான் சந்தோஷமடைகிறேன்"



அவளது மகள் நாயோன் மற்றும் அவளது புருஷன் இளம் கண்காணி யோன்கில் ச்சங்

**கண்காணியை சன்யோங் லீ,** வயது 44, கிம்ஹே மான்மின் திருச்சபை, தென்கொரியா

மே 2011ல், நான் எனது தோழியால் சபைக்கு வழிநடத்தப்பட்டு பங்கு பெற ஆரம்பித்தேன். நான் சந்தோஷமாக கிறிஸ்தவ வாழ்வு நடத்தினேன். அநுதின வேதபாட வகுப்பு எனக்கு ஆர்வமாய் இருந்தது. நான் தசமபாகம் மற்றும் தரும காணிக்கைகளை ஏறெடுத்து தேவனுடைய வார்த்தையின்படி வாழ முயற்சி செய்தேன். நான் தொலைக்காட்சி பார்ப்பதை விட்டுவிட்டு கிறிஸ்தவ புத்தகங்கள் வாசிப்பதை விரும்பினேன். மேலும், நான் தேவனுடைய வார்த்தையை அறிய அறிய ஆவியில் நான் தாகமுள்ளவளானேன்.

செப்டம்பர் 2012 பிற்பகுதியில், நான் இணையதளத்தில் ஆவிக்குரிய நபர் ஒருவருடைய புத்தகங்களைத் தேடிக் கொண்டிருந்தேன். அச்சமயத்தில்தான், நான் மான்மின் மத்திய திருச்சபையின் வலைதளத்தையும் www.manmin.org, அறிவர். ஜேராக் லீ அவர்களுடைய பல்வேறு புத்தகங்களையும் கண்டுபிடித்தேன். அவைகளின் தலைப்புகள் மற்றும் பொருள் சுருக்கங்களை வாசித்தபோதுதானே என் இதயம் வேகமாக அடிக்கத் துவங்கியது. இந்த புத்தகங்கள் அனைத்தையும் வேகமாக வாசிக்கக்கூடிய வழியைக் குறித்து யோசிக்க முயற்சித்தேன். மேலும், அப்புத்தகங்கள் மின் பதிப்புகளைக் கொண்டுள்ளது என்று அறிந்துக் கொண்டேன்.

நான் அவரது மின் புத்தகங்களை வாங்கி எனது ஸ்மார்ட் போனில் அவைகளை பதிவிறக்கம் செய்தேன். நான் அவைகளை பின் இரவு வரைக்கும் வாசித்து முழு உலகமே என் கையில் இருப்பதை போல உணர்ந்தேன். அப்புத்தகங்கள் விவரிக்க முடியாத மகிழ்ச்சியை எனக்குத் தந்து என் இருதயத்தை அசைத்தது. மேலும் நான் வசித்த கிம்ஹே பகுதியில் மான்மின் மத்திய திருச்சபையின் கிளை சபை ஒன்று இருந்தது என கேள்விப்பட்டேன். அக்டோபர் 4, 2012 அன்று நான் கிம்ஹே மான்மின் திருச்சபையில் பங்கு பெற துவங்கினேன்.

பரிசுத்த சுவிசேஷம் என் இருதயத்தில் இருந்த சத்தியமற்ற காரியங்களை வெளிப்படுத்தியது. மேலும் அது என் பாவத்தின் பிரச்சனைகளை எப்படி தீர்ப்பது என்று எனக்கு கற்பித்தது. நான் என் சுயநல எண்ணத்தை அகற்றி மற்றவர்களின் நிலையிலிருந்து யோசிக்க ஆரம்பித்தேன். நான் கோபத்தை உணர்ந்த போது ஒரு வேளை உணவு அல்லது ஒரு நாள் உபவாசத்தை செலுத்தி ஜெபித்தேன். மேலும் நான் "அன்பு அத்தியாய பிரசங்கங்களில்" விளக்கப்பட்ட ஆவிக்குரிய அன்பை வெளிப்படுத்த முயற்சித்தேன். தலைமைப் போதகருடைய செய்திகளைக் கவனிப்பதற்கு நான் மிகவும் சந்தோஷப்பட்டேன்.

நாம் செய்ததற்கேற்ப நமக்கு பிரதிபலன் அளிக்கும் தேவனுடைய ஆவிக்குரிய பிரமாணத்தை கூட அறிந்துணர்ந்தேன். அதிலிருந்து நான் என்னை சேவைகளில், ஜெபத்தில், தன்னார்வ வேலைகளில் மற்றும் காணிக்கை போன்ற காரியங்களில் அர்ப்பணித்தேன். ஆண்டவருடைய இருதயத்தை அடைய முயற்சித்தேன். பின், அன்பின் தேவன் என் கணவரது தொழிலில் பொருளாதார ஆசீர்வாதத்தையும், நாங்கள் ஆரோக்கியமாகவும் சமாதானமாகவும் இருக்கும்படியான ஆசீர்வாதத்தையும் தந்தார். அவரது தெளிவான சித்தத்தை நான் அறிந்து நம்பிக்கையில் வாழும்படி என்னை அநுகிரகித்த தேவனுக்கு எல்லா நன்றிகளையும் மகிமையையும் ஏறெடுக்கிறேன்.

## "60 ஆண்டுகளாக என்னை கஷ்டப்படுத்திய குடிப்பழக்கத்திலிருந்து நான் விடுதலையாக்கப்பட்டேன்"



அவரது மனைவி மூத்த கண்காணியை பியோங்கி கிம் அவர்களுடன்

**கண்காணி இல்நாம் ஹாங்,** வயது 85, மாகாணம் 25, தென்கொரியா

என்னுடைய பெற்றோர்கள் குடிக்க விரும்பியதால் நான் மதுவை மிகச் சிறுவயதிலிருந்து குடிக்க துவங்கிவிட்டேன். நான் குடித்தபின் மிக கெட்ட காரியங்களைச் செய்தேன்; அதற்காக நான் பேர்போனவன். எனது மனைவி என் நிமித்தம் கஷ்டகாலத்தை அனுபவித்தாள்.

1997ல், என் மகள், போதகர் ஜின்சுக் ஹாங் வழிநடத்துதலின்கீழ் என்னுடைய மனைவியுடன் நான் சபையில் பங்குபெற ஆரம்பித்தேன். ஆனால் நான் ஞாயிறு காலை ஆராதனையில் மட்டும் பங்குப் பெற்று மீண்டும் என் நண்பர்களைச் சந்தித்து பின் இரவு வரை மதுபானம் அருந்தினேன். நான் வீட்டில் பொருட்களைத் தூக்கி எறிந்து சத்தம் போட்டேன். அதை நான் வெறுத்தேன், காரணம் என்னால் அதை நிறுத்த முடியவில்லை.

2010ல், ஒரு ஞாயிறு அன்று நான் திடீரென்று ஞாயிறு மாலை ஆராதனையை ஏறெடுக்க விரும்பினேன். தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்களது செய்தி என் இருதயத்தை அசைக்க துவங்கியது. என் மீது மகா கிருபை வந்தது. அந்நாளிலிருந்து நான் மதுவை வெறுக்க ஆரம்பித்தேன். இதை கற்பனைகூட செய்ய முடியவில்லை! 60 ஆண்டுகளுக்கு மேலாக என்னை கஷ்டப்படுத்திய மதுபான அடிமைத்தனத்திலிருந்து இறுதியாக நான் விடுதலையானேன். ஹலேலூயா!

நான் எனது குடும்பத்தில் ஒரே மகனாயிருந்த காரணத்தால் சுயநலமான வாழ்வு வாழ்ந்தேன். ஆனால் என் மனைவியின் இருதயத்திற்கு கவனம் செலுத்தக்கூடிய நபராக புதுப்பிக்கப்பட்டேன். தேவனை பிரியப்படுத்தும் ஆசையுடன் மான்மின் செய்தித்தாளை பரப்பி சமாதானத்துடன் வாழ்கிறோம். நாங்கள் அநுதினமும் வேதம் வாசித்து தலைமை போதகரின் புத்தகங்களை வாசித்து, ஜெபித்து வருகிறோம். நாங்கள் சந்தோஷமாக உள்ளோம். இந்த வயதான காலத்தில் ஆரோக்கியமும் சமாதானமும் உள்ள வாழ்வு நடத்த எங்களை அனுமதித்த ஆண்டவருக்கு எல்லா நன்றிகளையும் மகிமையையும் ஏறெடுக்கிறோம்.

# "ஆண்டவருடைய அன்புக்கு நன்றியாக நான் புதிதான ஜீவியம் செய்கிறேன்"

மெய்யான கிறிஸ்தவர்கள் ஆண்டவருடைய உயிர்த்தெழுதலை விசுவாசிப்பதால், அவர்களுக்கு பரலோகத்திற்கான நம்பிக்கை இருக்கிறது. ஆகவே இயல்பாகவே தேவனுடைய வார்த்தையினால் புதுப்பிக்கப்பட வாஞ்சிப்பர். தேவனை விசுவாசித்து அவருக்கு கீழ்ப்படிந்தவர்களுடைய வாழ்வில் தேவன் தந்த பதில்களையும் ஆசீர்வாதங்களையும் குறித்த பல்வேறு சாட்சிகளை பார்ப்பதின்மூலம், அவருடைய மகா பெரிய அன்பை உணர்ந்து உயிர்த்தெழுதலின் நம்பிக்கையை அதிகமாக நாம் பெற்றுக்கொள்வோம்.



சகோதரி மார்க்ரெட் அட்டியேனோ
வயது 15, கென்யாவில் அவளது தாயுடன்

## "எனது குருட்டு கண்கள் பார்வையடைந்தன"

கென்யாவின் நைரோபியிலிருந்து கிட்டத்தட்ட 400km தொலைவிலுள்ள சியாயாவில் வசித்து வரும் 7ஆம் வகுப்பு மாணவி நான். பிப்ரவரி 23, 2015 அன்று ஆங்கில வகுப்பில் எனக்கு பயங்கரமான தலைவலி இருந்தது. மதியான வேளையில் திடீரென்று எனது கண் பார்வையை நான் இழந்துவிட்டேன். என்னால் எதையும் பார்க்க முடியவில்லை. நான் பதைபதைத்து கதறினேன். இது என் நண்பர்களையும் வியப்பிற்குள்ளாக்கியது. அவர்கள் என்னை எனது ஆசிரியரிடம் அழைத்துச் சென்றார்கள். ஆனால் அந்த பிரச்சனையை சமாளிக்க எந்த ஒரு வழியும் இல்லை. அடுத்த நாள் ஒன்றும் வித்தியாசமாகவில்லை. நான்தானே எதையும் செய்யமுடியாத நிலை இருந்தது.

எனது தாயார் அதிச்சியுற்று என்ன செய்ய வேண்டும் என அறியாதிருந்தார். ஆனால் தேவனில் அவர்களுக்கு விசுவாசம் இருந்தது, அதனால் அவர்கள் முழந்தாள்படியிட்டு தேவனை நோக்கி ஜெபித்தார்கள். அவர்கள் எங்களது அயலகத்தாரிடமும் உறவினர்களிடமும் எனக்காக ஜெபிக்கும்படி கேட்டார்கள். ஒருவர் அவளிடம் மந்திரவாதம் செய்யும்படி சொன்னார், ஆனால் அவர்கள் அதற்கு இசைந்துபோகவில்லை.

எனது தாயாருடன் நான் அருகாமையிலிருந்த மருத்துவ மனைக்கு சென்று பரிசோதனை செய்தேன். அவர்களால் அதற்கான எந்த ஒரு காரணத்தையும் கண்டுபிடிக்க முடிய வில்லை. ஆனால் என் கண்களைக் குணமாக்க எந்த ஒரு வழியுமே இல்லை என்பதை மட்டும் அவர்கள் கூறினார்கள்.

மூன்று நாட்களுக்குப் பிற்பாடு எனது சூழ்நிலையைக் குறித்துக் கேள்விப்பட்ட எனது உறவினர் எங்களைப் பார்க்க வந்தார். அவர்கள் நைரோபி மான்மின் பரிசுத்த திருச்சபையில் சேவை செய்யும் போதகர் போவாஸ் அவர்களது தாயார். கைக்குட்டை ஜெபத்தின்மூலமாக வெளிப்பட்ட வல்லமையான கிரியைகளைக் குறித்து நாங்கள் கேள்விப்பட்டோம் (அப் 19:11–12). அதனால் நாங்கள் ஜெபத்தைப் பெற்றுக்கொள்ள வாஞ்சித்தோம்.

அவர்களது உதவியுடன் நைரோபி மான்மின் பரிசுத்த திருச்சபைக்கு ஊழியம் செய்யும் பிஷப் அறிவர். மியாங் ஹோச்யோங் அவர்களோடு தொடர்பு கொள்ள முடிந்தது. அவர் எங்களது தவறான செயல்களை அறிக்கை செய்யும்படி கூறி ஊக்கப்படுத்தினார். மான்மின் மத்திய திருச்சபையின் தலைமைப் போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்கள் ஜெபித்துக் கொடுத்த கைக்குட்டையை வைத்து எனக்காக ஜெபித்தார். ஜெபத்திற்குப் பின்னர் நான் வேதாகமத்தைப் பார்க்க முயற்சித்தேன். அச்க்ஷணப்பொழுதில், எனது பார்வை தெளிவாகி எழுத்துக்கள் என் கண்கள் முன் தெரிந்தன. ஹலேலூயா!

குணமாக்க முடியாத எனது குருட்டிலிருந்து என்னை குணமாக்கி ஒளியின் பிரகாசமான பாதைக்கு என்னை வழிநடத்தி கொண்டிருக்கிற ஆண்டவருக்கு எல்லா நன்றியையும் மகிமையையும் செலுத்துகிறேன்.

## "எனது மகனின் நிணநீர் மண்டலத்திலிருந்த செல் கட்டி மூன்றாம் நிலையிலிருந்தது, ஆனால் அவையெல்லாம் போய்விட்டன!"

சீதா சுனார், வயது 30, நேபாளம்



நிணநீர் கட்டியிலிருந்து சுகமான தனது மூத்த மகன் சூரஜ் சுனார் (வலது), மகள் கங்கா சுனார் மற்றும் இரண்டாவது மகன் சாகர் சுனார் உடன்

நவம்பர் 2013ல், எனது மூத்த குமாரன் சூரஜ் சுனார் வயது 13, அடிக்கடி இறும்பி உயரிய காய்ச்சலில் அவதிப்பட்டான். நான் அவனுக்கு சலி பிடித்திருக்கும் என்று தான் நினைத்தேன். ஆனால் அவன் எடை குறைய ஆரம்பித்தான். அவனது வலது மார்பில் வீக்கம் போன்ற விநோத அறிகுறிகள் உருவாக ஆரம்பித்தன.

நேபாளத்தின் தலைநகரமான காத்மாண்டுவில் உள்ள காந்தி சிறுவர் மருத்துவமனைக்கு நான் அவனோடு சென்றேன். அவர்கள் அவனுக்கு நிணநீர் கட்டி மூன்றாம் நிலையில் உள்ளது என்றனர். அது எங்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அவனுக்கு 60,000 இரத்ததட்டுகள் மட்டுமே இருந்தன (சீர்நிலை 1,50,000–4,00,000), மற்றும் அவனது ஹிமோக்ளோபின் எனப்படும் இரத்தநிறமிகளின் அளவுகள் கிட்டத்தட்ட 7.1 ஆக இருந்தது (சீர்நிலை 12–16). அவன் உடனடியாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு புற்றுநோய் சிகிச்சையைப் பெற்றான். அவனது முடி அனைத்தையும் இழந்தான். அவன் அபாயகரமான நிலைக்குத் தள்ளப்பட்டான். ஆறு மாதங்களுக்குப் பிறகும்கூட எந்த ஒரு முன்னேற்றமும் இல்லை. நான் ஆவியில் எளிமையாகி எனது நாத்தனார் பேசிய நேபாளத்தில் உள்ள மான்மின் பணித்தள மையத்திற்குச் சென்றேன்.

கஷ்டத்தை உணர்ந்து, எனது குடும்பத்தினர் அனைவரும் மே 2014ல் பதிவு செய்தோம். ஆனால் நாங்கள் சில முறைகள் மட்டுமே பங்குபெற்று தொடர்ச்சியாக நாங்கள் விக்கிரகங்களை வணங்கி வந்தோம். அதனால் புற்றுநோய் செல்கள் அவனில் வேகமாக பரவியது. அவன் உயரிய காய்ச்சலாலும், சுவாசிப்பதில் கஷ்டப்பட்டதாலும் பெரும் வலியினால் அவதிப்பட்டான். அவன் சீக்கிரம் மரித்துவிடுவான் என்ற நிலையிலிருந்தான். அதே வேளையில், அவன் மான்மின் சேவை மையத்திற்கு ஊழியம் செய்யும் போதகர் கிரேஸ் லீயைக் காண ஆவலாயிருந்தான். அவர்கள் அவனை ஜூன் மாதத்தில் பார்க்க வந்தார்கள்.

அவர்கள் விக்கிரகாராதனையிலிருந்து மனந்திரும்பும்படி கூறினார்கள். எனது மகனை ஆராதனை வேளைகளில் தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளும்படி சொன்னார்கள். அவன் தனது அத்தையைப் பின்பற்றி 2012லிருந்து சபையில் பங்குபெற்றாலும் அவன் ஆராதனைகளை சரியாக ஏறெடுக்காமல் இருந்தான். காரணம் அவன் ஆராதனை நேரத்தில் ஆலயத்திற்கு வெளியே விளையாடிக் கொண்டிருந்தான். போதகர் லீ அவர்கள் என்னை 21 நாட்கள் உபவாசத்தை ஏறெடுத்து தேவனிடம் விசுவாசத்தைக் காண்பிக்கச் சொன்னார்கள். மேலும் அவர்கள் சீயோல், தென்கொரியாவிலுள்ள மான்மின் மத்திய திருச்சபையின் தலைமைப் போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்கள் ஜெபித்த கைக்குட்டையை வைத்து அவனுக்காக ஜெபித்தார்கள் (அப். 19:11–12). மேலும் அவர்கள் அவன்மீது மூவான் மதுர தண்ணீரும்கூட தெளித்தார்கள்.

பின் வந்த 21 நாட்களாக நான் என் குமாரனின் சுகத்திற்காக என் இருதயத்தோடு தேவனிடம் ஜெபித்தேன். நான் ஒவ்வொரு நாள் இரவும் உபவாசம் இருந்து, விக்கிரகங்களை நான் வழிபட்டதற்காக பாவ அறிக்கை செய்து மனந்திரும்பினேன். ஜெபத்திற்குப் பின்னர் என் மகன் சீர்நிலைப் பெற ஆரம்பித்தான். காய்ச்சல் குறைந்தது. ஒவ்வொரு மூன்று நாளைக்கும் இரத்தத்தை மாற்ற வேண்டிய அவசியமில்லாதபடிக்கு அவனுடைய இரத்தத்தில் இருந்த நிறமிகளினுடைய எண்ணிக்கை மற்றும் இரத்ததட்டுகளின் அளவும் சீர்நிலைக்கு திரும்பியது. ஆகஸ்டில், அவனில் எந்த ஒரு புற்றுநோய் செல்களும் காணப்படவில்லை. ஹலேலூயா!

எனது மகனின் வியாதி மூலமாக என் குடும்பத்தினர்கள் இரட்சிப்பின் வாய்ப்பை பெறுவதற்கு ஆசீர்வதித்த ஜீவனுள்ள தேவனுக்கு எல்லா நன்றி மற்றும் மகிமையை செலுத்துகிறேன்.




நிணநீர் தண்டு அறுவை பரிசோதனை, அதன் மூன்றாம் நிலையில் நிணநீர் கட்டி உள்ளது என காண்பிக்கிறது




எலும்பு ஊன் பரிசோதனையில் எந்த ஒரு நிணநீர் கட்டியும் இல்லை

GCN
Global Christian Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.gcntv.org
e-mail: gcntvindia@gmail.com

MIS
Manmin International Seminary
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.manminseminary.org
e-mail: indiamis@gmail.com

Chennai Manmin Holiness Church
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: manminnewsasia@gmail.com

